மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதெல்லாம் தனித் தனிப் பிரச்சினைகள். மானியக் கோரிக்கையிலே பேசுங்கள். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் தமிழ்நாட்டிலே மட்டுமில்ல, ஒட்டுமொத்தமாக இந்தியாவிலேயே இன்றைக்கு நீராதாரம் என்பது குறைந்து கொண்டு வருகிறது. ஆகவே, பசுமைத் திட்டம் என்பது நாட்டிலே செழித்தால்தான் மழை பெய்யும். அதன்மூலமாக நீராதாரத்தை உருவாக்க முடியும் என்கிற பொதுவான கொள்கையில் இன்றைய தினத்திலே எல்லா அரசுகளும்--மத்திய அரசும், மாநில அரசுகளும் கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றன. இச்சூழ்நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல நோக்கத்தோடு, நல்ல உள்ளத்தோடு இந்த 10,000 சாலைப் பணியாளர்களை ஒரு மறு ஆய்வு செய்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, அதெல்லாம் அப்புறம் பேசிக்கொள்ளுங்கள். நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதம் முடிவுற்றது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (14–3–2005) திங்கட்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

42. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதும் இல்லை–

ஃஃஃ